DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 19/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வெங்கிடுசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 06.07.2023.

**( முதல் விசாரணை ):**

நான் சின்னபாப்பனூத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நானும் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த ராஜேந்திரனும் மதியம் 2.30 மணிக்கு என்னுடைய பைக்கில் உடுமலை நோக்கி கல்லிபாளையம் பிரிவு அருகே வந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த கார் நான் ஓட்டி வந்த பைக் மீது மோதி தூக்கி வீசியது அந்த விபத்தில் எனக்கு முன் தலையிலும், கழுத்து மற்றும் தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டு நான் மயக்கமாகிவிட்டேன். அந்த விபத்தில் என் பின்னால் அமர்ந்து வந்த ராஜேந்திரன் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். முக்கோணத்தில் இருந்து உடுமலை – பொள்ளாச்சி மெயின் ரோட்டின் வலது புறம் கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். கார் என்ன கலர் என்று மோதியபோது தெரியவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பைக்கும் காரும் நேருக்கு நேர் தான் மோதிக்கொண்டது

என்றால் சரிதான். என் பைக் மீது மோதியது எந்த வாகனம் என்று போலிசார் சொல்லி தான் எனக்கு தெரியும் anth என்றால் சம்பவ இடத்தில் இருந்து பார்த்து சொல்லி இருப்பார்கள் எனக்கு கார் வந்து மோதியது தான் தெரியும் வேறு எதுவும் தெரியாது. காரின் முன்பக்கம் எனது பைக்கின் முன்பக்கம் தான் மோதியது. எதிரி ஓட்டி வந்த கார் மோதி விபத்து எதுவும் ஏற்படவில்லை. வாகன விபத்து இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கில் பொய்யாக எதிரி கார் ஓட்டி வந்ததாக தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-.K.Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.